**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No.203 of 2023**

அரசுதரப்பு **13 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவிதா | வயது: 46 | |
| தந்தை/ கணவர் பெயர் | : பிரபாகரன் | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : ரெட்டியார்பாளையம் | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : பாண்டிச்சேரி | சமயம் | : |
| மாவட்டம் | :பாண்டிச்சேரி | மொபைல் | : 9498107313 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 25.05.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி முன்னிலை**.** வழக்கறிஞர் முன்னிலை

முதல் விசாரணை**:**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக உள்ளேன். இதற்கு முன்பு கடலூர் மாவட்டம் திருப்பாபுலியூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தபோது கடந்த 27.03.2023 அன்று நான் பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவர் மேற்கு ராமாபுரம் கிராமத்தை சேர்ந்த சீனுவாசன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.142/2023 ச/பி.279, 304(A) இதச படி வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு பெற்றுக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடமான கிழக்கு ராமாபுரம் சக்திவேல் என்பவர் வீட்டின் அருகே காலை 11.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பழனிவேல், ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தி மாதிரி வரைபடம் தயார் செய்து, பார்வை மகசர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்பட்டது. பின்னர் இவ்வழக்கின் ஆஜர் சாட்சிகளான சீனுவாசன், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான சின்னராஜ், விநாயகமூர்த்தி, சக்திவேல் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியானவர் தனக்கு சொந்தமான TN-31-BD- 2836

என்ற Eicher Bus (Mount litera zee) ஐ அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சம்பவ இடத்தின் அருகே விளையாடி கொண்டிருந்த வாதியின் மகன் சிறுவன் தேஜேஸ்வரன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி குழந்தை சம்பவ இடத்திலேயே இறந்து விட்டது என்பது தெரியவந்தது. அதன் பின்பு இறந்த குழந்தை கடலூர் அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்பட்டது. பின்னர் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் இறப்பின் தன்மை அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்காக முதல்நிலை காவலர் ராமமூர்த்தி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் மருத்துவருக்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கின் மேல்நடவடிக்கையாக விபத்து ஏற்படுத்திய எதிரியை தேடி செல்லும்போது அவர் அன்றைய தினமே 27.03.2023 மாலை 05.00 மணியளவில் கடலூர் வண்டிபாளையம் ரோடு ரங்ரூப் மகால் அருகே நின்றுகொண்டிருந்த ஆஜர் எதிரியை சாட்சிகள் பாபு, வெங்கடேசன் ஆகியோர் அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். எதிரி வாகனத்தை அடையாளம் காட்டினார். பின்பு எதிரியை நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களிடம் நீதிமன்ற காவலுக்காக அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN-31-BD-2836 ஐ மோட்டார் வாகன ஆய்வுக்கு 29.03.2023 அன்று அனுப்பி வைத்தேன். பிணகூராய்வு செய்த அரசு மருத்துவர் கோபாலகிருஷ்ணன், விபத்து வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் முகுந்தன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் முதல்நிலை காவலர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இத்துடன் என் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுள் 279, 304(A) படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -இல்லை</u>

/ஓம்.இரா.தனம்/

தலைமை நீதித்துறை நடுவர்,

கடலூர்